

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 12.08.2023 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய, வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனுதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத்தலைவர் கே.எஸ்.என்.மணிமுத்து உட்பட பலர் உள்ளனர்.

## நூற்றாண்டு விழா! கலைஞரின் சமூக நீதிக் கொள்கைகளை

# தமிழகமெங்கும் ஒலிக்கச் செய்திடுவோம்!

### கழக சிறுபான்மையினர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக.15-

திராவிட முன்னேற்றக் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 12.08.2023 அன்று மாநிலச்செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில துணைச் செயலாளர்கள் முனவர் ஜான், வி.ஜோசப்ராஜ், இரா.அன்வர்கான், என். பி.எம்.சேக் அப்துல்லா, எம். நூருல்லா, அடையாறு ஷபீல், ரபி அஹமது, நாகை மு.சாகுல் அமீது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வின் துவக்கத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைத்தலைவராக திறம் பட செயலாற்றி திடீர் மறைவெய்திய எல்.எஸ். எஸ்.மோகன் அவர்களின் மறைவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அது வருமாறு:-

ஒப்பற்ற கழகத்தலைவர் முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன், தலைமைக் கழக அறிவிப்பின்படி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு அனைத்து கழக மாவட்டங்களிலும் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பாக 'முத்தமிழறிஞரின் சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள்' குறித்த நிகழ்ச்சிகளை சிறுபான்மையின மக்களுடன், உள்ளூர் இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ மத தலைவர்களைக் கொண்டு நடத்துதல்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மை கொள்கைகள் குறித்த ஆவணப் படங்களை திரையிட்டு காட்டல்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பாக வகைப்படுத்தப்பட்டுள்ள 10 மண்டலங்களிலும் "முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சமய சார்பற்ற சமூக நீதி செயல்பாடுகள்" எனும் தலைப்பில் அறிவுப்பசியாற கருத்தரங்கம் மற்றும் வயிற்றுப் பசியாற சமபந்தி நிகழ்ச்சிகளை நடத்துதல்.

மாவட்ட வாரியாக முன்னெடுக்கப்படும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிகழ்ச்சிகள், இடம், தேதி மற்றும் பங்கேற்க உள்ள சிறப்பு பேச்சாளர்கள் குறித்த முழு விவரத்தினை மண்டல பொறுப்பாளர்கள் தயாரித்து தலைமைக் கழகத்திடம் சமர்ப்பித்தல் மற்றும் தலைமைக் கழக ஒப்புதலுடன் இம்மாத இறுதிக்குள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகளின் அறிமுகக்கூட்டம் சென்னையில் நடத்துதல்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இராமநாதபுரம் மாவட்ட

# சட்டமன்றத் தொகுதிகளில் பாக முகவர்கள் கூட்டம்!

### அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆலோசனைகளை வழங்கினார்!

இராமநாதபுரம், ஆக. 15-

இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகிற 17ஆம் தேதி தென் மாவட்ட அளவிலான பாக முகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்க உள்ளார்

இந்த நிலையில் இந்த நிகழ்ச்சிக்கு முன்னேற்பாடாக முதுகுளத்தூர், பரமக்குடி, திருவாடனை, இராமநாதபுரம், சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவை தலைவர் சத்தியமூர்த்தி, தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராம லிங்கம், எம்.எல்.ஏ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கதர் கிராம வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

மேலும் வரும் 17ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் பாக முகவர்கள் கூட்டத்தில் இராமநாதபுரம்,பரமக்குடி முதுகுளத்தூர், திருவாடனை ஆகிய நான்கு சட்டப்பேரவை தொகுதியில் உட்பட்ட 1.377 பாகம் முகவர்கள் 100% கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர்ராஜன், முன்னாள் மாவட்ட செயலாளர் சுப.த. திவாகரன். மாநில தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் விஜய கதிரவன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் பெருநாழி போஸ் மாவட்ட ஒன்றிய குழு தலைவர் உ.திசை வீரன், கமுதி ஒன்றிய செயலாளர்கள் வி. வாசுதேவன், சண்முகநாதன், மனோகரன், சாயல்குடி ஜெயபால், முதுகுளத்தூர் பூபதி மணி, மாயன், ஆறுமுகவேல், கோவிந்தராஜ், சண்முகம் குலாமுகைதீன், ஷாஜகான் வெங்கடேஷ்,

பரமக்குடி ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, நயினார் கோவில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாமலை, சக்தி, பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் செயலாளர் ஜீவரத்தினம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கருணாநிதி, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பன்னீர்செல்வம், தகவல் தொழில்நுட்ப துணை அமைப்பாளர் குழந்தை ஏசுராஜா, சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் குழந்தைவேலு,எரிக்சூடு, எம். முத்துராமலிங்கம்,

மற்றும் மண்டபம் ஒன்றிய செயலாளர்கள் கே. ஜே. பிரவீன், முத்துக்குமார், நிலோபர் கான், மண்டபம் பேரூர் கழக செயலாளர் ரகுமான் மரக்காயர், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணை தலைவர் பிரவீன் தங்கம்,ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான் இராமநாதபுரம். ஒன்றிய பெருந்தலைவர் கே.டி பிரபாகரன் மற்றும் செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பிஆர்.எஸ் மங்கலம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பிரமணியன், என்ற கண்ணன், ராஜாராம், சரவணன், ரவி, மோகன், கண்ணன் மற்றும் பாக முகவர்கள் மாநில மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக பொறுப்பாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட செயலாளர் சுப.த. திவாகரன். மாநில தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச்செயலாளர் விஜய கதிரவன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் பெருநாழி போஸ், ஒன்றிய செயலாளர்கள் வி.வாசுதேவன், உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



இராமநாதபுரம் மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.



நெல்லை மாவட்டம் பெருமாள் புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுகாதாரத் துறையின் மூலம் முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு மக்களை தேடி மருத்துவம் பெட்டகங்களை சட்டப்பேரவை தலைவர் அப்பாவு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று வழங்கினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன், ஞானதிரவியம் எம்.பி, அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ண மூர்த்தி, துணை மேயர் ராஜு, பாளையங்கோட்டை ஒன்றிய குழு தலைவர் தங்கபாண்டியன், மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம்பாசிலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# சிவகங்கை மாவட்டத்தில் நல உதவி - மலரஞ்சலி!

### மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 15-

சிவகங்கை மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. மாவட்டம் முழுவதும் கழக முன்னோடிகள் மலரஞ்சலி செலுத்தியும் முதியோர்களுக்கு உணவு வழங்கியும் நடைபெற்றது.

**சிவகங்கை**

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் நீதிமன்ற சாலை முன்பாக அலங்கரிக்கப்பட்ட கலைஞர் திருஉருவப்படத்திற்கு நகர்கழக செயலாளர் துரை ஆனந்த் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து, நிர்வாகிகள் மதார், ஜெயகாந்தன், ஆறு .சரவணன் மகளிர் அணி பாக்கியலட்சுமி விஜயக்குமார், நகர்மன்ற துணைத் தலைவர் எம்.கார். கண்ணன், ராமதாஸ், வீர காளை, துபாய் காந்தி, கீதா கார்த்திகேயன், ஆர்.டி.சேகர், சூரி, ஹரிகரன், சதீஷ்குமார், கார்த்திகேயன், ஹரி பாஸ்கர், முத்து கண்ணன், முருகேசன், மகளிரணி திலகவதி கண்ணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நகரில் 27வார்டுகளில் கலைஞர் உருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

சிவகங்கை தெற்கு ஒன்றியம் சார்பில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் கலைஞர் திருஉருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி அணி துணை அமைப்பாளர் மார்கரெட் கமலா, மாவட்ட மகளிர் தொண்டரணி துணைஅமைப்பாளர் திலகவதி கண்ணன், நிர்வாகிகள் பொன்னம்பலம், செல்வம், தினேஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். எம்.மதிவாணன் ஏற்பாட்டின் பேரில் காஞ்சிரங்கால் முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிங்கார்த்தி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**காரைக்குடி**

காரைக்குடியில் 34 வார்டுகளிலும் கலைஞர் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகர் மன்றத் தலைவர் எஸ்.முத்துதுரை, நகர்கழகச் செயலாளர் என்.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சன். சுப்பையா, சொ.கண்ணன், லட்சுமி, சொக்கலிங்கம், ஜான் கென்னடி, சேவியர், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், பொதுக்குழு உறுப்பினர் ஆதி கண்ணாத்தாள், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் குமரேசன் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**இளையான்குடி**

இளையான்குடி வடக்கு ஒன்றியத்தின் சார்பில் செந்தமிழ் நகர், இளையான்குடி நகரில் தலைவர் கலைஞர் திருஉருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. முன்னாள் எம்.எல்.ஏ. வடக்கு ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேரூர்கழகச் செயலாளர் நஜ்முதீன், நிர்வாகிகள் பா.காளிமுத்து கா.முத்துராமலிங்கம், டி.கே.இப்ராஹிம், ஜெயினுலா வுதீன், உமர், ஆரிப், காதர் பாட்சா, இளைஞரணி பைரோஸ்கான், தகவல் தொழில் பணி கண்ணன், அழகேசன், சத்தியேந்திரன் , நாசர், இப்ராஹிம் ஷா, மணிமொழியன், ஜமால் முகமது, கனி, யூனிஸ், மனோகரன், அல் இப்ராஹிம் சா. பழனிவேல் வெற்றி, சுப. நீலமேகம் சரவணன், ராஜா சிங், நாகராஜன், கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

**மானாமதுரை**

மானாமதுரை நகர்கழகச் செயலாளர் கா. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. மாரியப்பன் கென்னடி நகர் மன்ற துணைத்தலைவர் பாலாசுந்தர், நிர்வாகிகள் ரவிச்சந்திரன் ஒன்றிய குழு தலைவர் லதா அண்ணாதுரை ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் சண்முகநாதன், மகளிரணி சண்முகப்பிரியா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**திருப்பத்தூர்**

பஸ் நிலையம் முன்பாக அலங்கரிக்கப் பட்ட கலைஞர் திருஉருவப்படத்திற்கு ஒன்றிய குழு தலைவரும் ஒன்றிய கழகச் செயலாளருமான எஸ்.சண்முக வடிவேல் மலரஞ்சலி செலுத்தினார். அவனை தொடர்ந்து பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், நிர்வாகிகள் திருநாவுக்கரசு, ராம. ரவி, பேரூராட்சிமன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், பொருளாளர். ஏ.எம்.கண்ணன் இளைஞர் அணி பஷீர் அகமது, பிச்சை முகமது, முத்துராமன், பெரி. முருகன், துணை அமைப்பாளர் ராதா கிருஷ்ணன், முத்துக்குமார், இளைஞரணி நிர்வாகிகள் மனோகரன், இளமாறன், ஷாஜகான், வைரமணி, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளி முத்து ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் சார்பில் கீழ சேவல் பட்டியில் ஒன்றிய செயலாளர் விராமதி மாணிக்கம் தலைமையில் கலைஞர் திருஉருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சுந்தர்ராஜன், ஆறுமுகம், ராமசாமி, கருப்பையா, ராமன், செந்தில் சுப்பிரமணியன், ராமு, லேனா மாரிமுத்து, தினகரன், முத்தையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை வந்தவாசி சாலையில் அமைந்துள்ள தாய் இல்லத்தில் மாநில தவழும் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் சார்பில் மாநில தலைவர் புஷ்பராஜ் தலைமையில் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர்கழக செயலாளர் ச.எம்.துரை ஆனந்த் நகர் மன்ற துணைத் தலைவர்எம். கார் கண்ணன், நிர்வாகிகள் விஜயகுமார், வீர காளை, இளைஞர் அணி அயூப்கான் இலக்கிய அணி ஞானசேகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அங்குள்ள முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பொறுப்பாளர் தனலட்சுமி நன்றி கூறினார்.

**திருப்புவனம்**

திருப்புவனம் பேரூர் ஒன்றிய கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மாவட்ட துணை செயலாளரும் பேரூராட்சி மன்றத் தலைவருமான த.சேங்கை மாறன் மலரஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்பசாமி பேரூர்கழக செயலாளர் நாகூர் கனி மீனவரணி துணைஅமைப்பாளர் அண்ணாமலை சேகர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**காளையார் கோவில்**

தெற்கு ஒன்றியத்தின் சார்பில் மறவமங்கலத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் தலைமையில் கலைஞர் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆரோக்கியசாமி தலைமையில் நிர்வாகிகள் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

**தேவகோட்டை**

தேவகோட்டையில் நகர் கழக செயலாளர் பெரி . பாலா தலைமையில் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நகர்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். 27வது வார்டில் முன்னாள் கவுன்சிலர் ஜாகிர் உசேன் தலைமையில் கலைஞர் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. வட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டார்கள்.

சிவகங்கை மின்வாரிய அலுவலகம் முன்பாக மின்வாரிய தொ.மு.ச.சார்பில் கலைஞர் திருஉருவப்படம் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தொ.மு.ச.பேரவை செயலாளர் முருகேசன் தலைமையில் நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இளையான்குடி கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றியசெயலாளர் தமிழ்மாறன் தலைமையிலும் மேற்கு ஒன்றிய செயலாளர் கா.வெங்கட்ராமன் தலைமையிலும் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு.செல்வராசன் தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

மாவட்டம் முழுவதும் கலைஞரின் திருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. முதியோர் இல்லங்களில் மதிய உணவுகள் வழங்கப்பட்டன.



வேலூர் மாவட்டம் கீ.வ.குப்பத்தில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மற்றும் முரசொலி தமிழ்மன்றம் சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். ஒன்றியச் செயலாளர் எல்.ரவிச்சந்திரன் தலைமையில், முரசொலி தமிழ்மன்ற நிறுவனர் சி.கோபி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரிமளம் பங்கேற்றனர். சேர்க்காடு கென்னடி, குடியாத்தம் பாரி, பேர்ணாம்பட்டு ராஜேந்திரன் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசினர்.